

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2052 ஏப்ரல் 29, 2021 புரட்சி 20 முழக்கம் 16 விலை: ரூ.3.00

## மாணவர் கழகம் நடத்திய கருத்தரங்கில் வரலாற்றுப் புரட்டுகளுக்கு மறுப்பு

# அம்பேத்கர் சமஸ்கிருத ஆதரவாளரா?

அம்பேத்கர் சமஸ்கிருதத்தை இந்தியாவின் தேசிய மொழியாக்க வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் முன்மொழிந்தார் என்று அண்மையில் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.ஏ. பாப்டே, பதவி ஓய்வுக்குப் பிறகு சட்டப் பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் பேசியிருந்தார். முரளி மனோகர் ஜோஷி, வாஜ்பாய் அமைச்சரவையில் மனித வளத்துறை அமைச்சராக இருந்த போதும் இதே கருத்தைப் பேசியிருந்தார். பா.ஜ.க. வினரும், 'சங் பரிவார்' அமைப்பினரும் சமஸ்கிருதத்துக்கு மட்டும் ஏனைய மொழிகளைவிட கூடுதல் நிதி ஒதுக்குவது பற்றி விவாதங்கள் வரும்போது அம்பேத்கரே சமஸ்கிருதத்தை தேசிய மொழியாக்க வேண்டும் என்று பேசியதாக பதிலளிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்துமே உண்மைக்கு மாறானவை; அப்பட்டமான பொய் என்று தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் 25.4.2021 அன்று மாலை 6 மணியளவில் நடந்த 'அம்பேத்கர் பிறந்த நாள்' 'ஊடகக் கருத்தரங்கில்' பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விளக்கினார். இது குறித்து அவர் பேசியதாவது:

அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் சமஸ்கிருதத்தைத் தேசிய மொழியாக்கலாம் என்ற கருத்தை முன்மொழிந்தார் என்பது உண்மைக்கு மாறானது; நிர்ணய சபையிலிருந்த வைதிக உணர்வாளர்களிடம் இந்தக் கருத்து வலிமையாக இருந்தது. எம்.கே. மைத்ரா என்பவர் தான் இத் தீர்மானத்தை முன்மொழிந்தார். அம்பேத்கர் முன்மொழியவில்லை. இதற்கு அம்பேத்கர் பதிலளித்துப் பேசிய கருத்துகள் திரித்துக் கூறப்படுகின்றன.

அரசியல் நிர்ணய சபையாயிருந்தாலும்வரைவுக் குழுவாக இருந்தாலும் அதில் உறுப்பினர்களாக இருந்த பெரும்பான்மையோர் பார்ப்பனிய இந்து மதவெறி நிறைந்த பழமைவாதிகளாகவே இருந்தனர். தங்களது கருத்துகள் சட்டத்தில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு பல்வேறு தீர்மானங்களைக் கொண்டு வந்தார்கள். அவற்றை அம்பேத்கர் நேரடியாக எதிர்த்துப் புறக்கணிக்காமல் சாதுர்யமாக அந்தத் தீர்மானங்களை நீர்த்துப் போக வைத்தார். முடிந்த வரை சட்டத்தில் அவை இடம் பெறாமல் பார்த்துக் கொண்டார். அதற்கு அவர் தர்க்கரீதியான வாதங்களை தனது கருவியாக்கிக் கொண்டார். ஒரு பிரச்சினை பிற்போக்குவாதிகளிடமிருந்து வரும்போது உடனே அதை வன்மையாக மறுத்துப் பேசுவதில்லை. மாறாக, அப்பிரச்சினை குறித்து ஏராளமான செய்திகள் வாதங்களை தனது அறிவாற்றல் கொண்டு அடுக்கிக் காட்டுவார். ஒரு கட்டத்தில் அவர்கள் தங்கள் கோரிக்கையைக் கைவிடச் செய்யும் சூழலை உருவாக்கி விடுவார். உதாரணமாக, மதக் கண்ணோட்டத்தில் பசுவைக் காப்பாற்றத் துடித்தவர்கள் பசுக்களைக் காப்பாற்றுவதை அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்து வாதிட்டனர். இதை வேறு ஒரு பிரிவினர் எதிர்த்தார்கள். இந்த விவாதங்களில் தலையிடாமல் அம்பேத்கர் ஒதுங்கி நின்று பார்வையாளராகவே இருந்தார். இறுதிக் கட்டத்தில் அடிப்படை உரிமை மனிதர்களுக்கானதே தவிர, விலங்குகளுக்குஅல்ல என்ற வலிமையான ஒரு வாதத்தை முன் வைத்தார். பசுக் காவலர்கள் பிடிவாதமாக இருந்ததால் சமரசத்துக்கான ஒரு திட்டத்தை முன் வைத்தார். இந்தப் பிரச்சினையை சட்டத்தில் இணைப்பதற்கு பதிலாக சட்டத்துக்கான வழிகாட்டும் கொள்கைகளில் இணைத்து விடலாம் என்றார். இந்தக் கொள்கைகள் சட்டப் புத்தகத்தில் இருக்கும்; ஆனால் சட்டத்துக்கான உரிமைகளைக் கோர முடியாது. அதிலும் 'பசு'வை மட்டும் குறிக்காமல் விவசாயத்துக்குப் பயன்படும் அனைத்து கால்நடைகளையும் விவசாயத்தைப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் காப்பாற்றப்பட வேண்டும் என்று சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறினார். 'பசுக் காவலர்கள்' இதை ஏற்றுக் கொண்டார்கள். 'பசுப் பாதுகாப்பு' அடிப்படை உரிமைகளில் ஒன்றாக்கி விடும் முயற்சி நீர்த்துப் போகச் செய்யப்பட்டது.

அதேபோல் தான் சமஸ்கிருதத்தைத் தேசிய மொழியாக்க வேண்டும் என்ற தீர்மானம் வந்தபோது அம்பேத்கர் நாசுக்காக இதைக் கையாண்டார். வடநாட்டார் ஆங்கிலத்தை ஏற்க மறுக்கிறார்கள்; தென்னாட்டார் இந்தியை ஏற்க மறுக்கிறார்கள்; சமஸ்கிருதத்தை தேசிய மொழியாக்கி விட்டால் எதிர்ப்பு குறைவாகத் தானே இருக்கும் என்று பார்ப்பனர்கள் முன் வைத்த வாதங்களைக் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டார். 'நீங்கள் கூறுவது சரி தான்; ஆனால் அதை உடனடியாக எப்படி செயல்படுத்த முடியும்; அதற்கு 3 கட்டங்களைத் தாண்டியாக வேண்டும். ஒன்று சமஸ்கிருதம் தேசிய மொழி என்பதை இந்தியாவில் அனைவரும் ஏற்க வேண்டும்; இரண்டாவது மாநில நிர்வாகத்தில் பணியாற்றுவோர் இம்மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; மூன்றாவது ஆங்கிலம் குறைந்தது 15 ஆண்டுகாலம் அலுவல் மொழியாக நீடித்தால்தான் நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியும். எனவே 15 ஆண்டுகளுக்குப் பிறகு சமஸ்கிருதத்துக்கு ஆதரவாக அனைத்து மாநிலங்களும் ஒப்புதல் தந்த பிறகு மாநிலத்தில் பணியாற்றுவோர் சமஸ்கிருதத்தில் நிர்வாகம் செய்யும் பயிற்சி பெற்ற பிறகு உங்கள் கோரிக்கையை பரிசீலிக்கலாம் என்றார் அம்பேத்கர். வாதங்களை அடுக்கும்போது அதில் உள்ள உண்மைகளை மறுக்க முடியாத நிலையில் சமஸ்கிருத ஆதரவாளர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர். இது தான் நடந்தது. தொடக்க நிலையிலேயே கடுமையாக எதிர்த்து புறந்தள்ளி விடாமல் நாசுக்காக அணுகி சமஸ்கிருதம் தேசிய மொழியாக்கும் முயற்சியை நிறுத்தினார். நிர்ணய சபையில் அம்பேத்கர் அணுகுமுறை இப்படித் தான் இருந்தது. ஆனால், சமஸ்கிருதத்தின் மீது அம்பேத்கர் தீவிரப் பற்றுக் கொண்டவர் போலவும். அதை தேசிய மொழியாக்க வேண்டும் என்பதே அவரது விருப்பம் என்றும் அம்பேத்கரை திரித்து உண்மைக்கு மாறாக 'சங்கிகள்' பேசி வருகிறார்கள்.

உண்மையில் சமஸ்கிருதத்தை முறையாகப் பயில அம்பேத்கர் விரும்பினார். வேதம், உபநிடதம் உள்ளிட்ட மூல நூல்களை ஆராய்வதற்கு சமஸ்கிருதத்தைப் படிக்க அவர் விரும்பியபோது பார்ப்பனர்கள் அவருக்கு சமஸ்கிருதத்தைப் பயிற்றுவிக்க மறுத்து விட்டனர். 'தீண்டப்படாத' சமூகத்தில் பிறந்த ஒருவர் சமஸ்கிருதம் படிப்பதை அவர்கள் விரும்பவில்லை. பிறகு ஜெர்மன் நாட்டில் உள்ள 'பான்' (Bonn) பல்கலைக் கழகத்தில் தான் அவர் சமஸ்கிருதம் கற்றார். இது தான் வரலாறு.

'சமஸ்கிருதம்' ஒரு மொழி என்ற எல்லையைத் தாண்டி அதை பார்ப்பன பண்பாட்டின் அடையாளமாகவே அம்பேத்கர் பார்த்தார். 'தீண்டப்படாதவர்கள் யார்' என்ற நூலில் அதைத் தெளிவாக விளக்குகிறார். இந்தியா முழுமைக்கும் பேசப்பட்ட மொழி தமிழ். 'இந்தியா' முழுதும் வாழ்ந்தவர்கள் நாகர்கள்; வடநாட்டு நாகர்கள், சமஸ்கிருதப் பண்பாட்டுக்கு அடிமையானார்கள். தென்னாட்டு நாகர்கள் சமஸ்கிருதத் திணிப்பை எதிர்த்து தமிழ் மொழியைக் காப்பாற்றினார்கள். சமஸ்கிருதப் பார்ப்பன பண்பாட்டை ஏற்காததே 'திராவிடம்' என்றார். 'திராவிடத்தை' எதிர்க்கும் சில 'அம்பேத்கரிஸ்டுகள்' கூட இருக்கிறார்கள். அவர்கள் அம்பேத்கர் கருத்தை சிந்திக்க வேண்டும். அம்பேத்கர் இவ்வாறு எழுதினார்:

**"தமிழ்** அல்லது **திராவிடம்** என்பது தென்னிந்தியாவின் மொழி மட்டுமல்ல; அது ஒட்டு மொத்த இந்திய நிலப் பரப்பின் மொழியாகவும் இருந்திருக்கிறது. அது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பேசப்பட்ட மொழி. வட **இந்திய நாகர்கள் தமிழை கைவிட்டு,** அதனிடத்தில் **சமஸ்கிருதத்தைக் கைக் கொண்டு விட்டனர்.** தென்னிந்தியர்கள் தங்கள் தாய்மொழியான தமிழைக் கைவிடவில்லை. இந்த உண்மையை மனதில் கொண்டால் தென்னிந்தியர்களுக்கு மட்டும் ஏன் திராவிடம் என்று பெயர் சூட்டப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். தாசர்கள் என்பவர்கள் தான் நாகர்கள். நாகர்கள் தான் திராவிடர்கள். இந்தியாவைப் பொறுத்தவரை இரண்டே இனங்கள் தான். ஒன்று ஆரியர்கள் மற்றொன்று திராவிடர்கள்." இது தான் 'சமஸ்கிருதம், 'திராவிடம்' குறித்து அம்பேத்கரின் பார்வை, என்றார், விடுதலை இராசேந்திரன்.

கருத்தரங்கில் தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சார்ந்த அன்பரசன், 'ஜாதியை அழித்தொழிக்கும் வழி' என்ற நூல் குறித்தும், விஷ்ணு, 'அம்பேத்கரின் பார்ப்பனிய எதிர்ப்பே பவுத்த நெறி' எனும் தலைப்பிலும், சந்தோஷ், 'பெண்ணியச் சிந்தனையாளர் அம்பேத்கர்' எனும் தலைப்பிலும் உரையாற்றினர். கனலி நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.

## 'ஜெய், ஹனுமான்' கோ கொரானா

அப்பாடா! இது வரை உலகமே தடுமாறி 'முச்சுத் திணறி' நின்ற ஒரு கேள்விக்கு இப்போது விடை கிடைத்து விட்டது. 'அப்படியா, கொரனா எங்கிருந்து எப்படி தோன்றியது? அது எப்படி பரவுகிறது? முழுமை யாக ஒழித்துவிட முடியுமா என்பதற்கெல்லாம் விடை கண்டுபிடித்து விட்டார்களா?" என்று கேட்டு விடாதீர்கள். அது தான் இல்லை. இது அதைவிட முக்கியமானது.

இராமாயணத்தில் வரும் அனுமான் (ஆஞ்சநேயன் என்ற பெயரும் உண்டு) எங்கே பிறந்தான் என்பதற்கு விடை கிடைத்து விட்டது. 'பிறந்த இடத்தை கண்டுபிடித்து விட்டோம்; சமஸ்கிருதப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் ஆய்வுக் குழு போட்டு, 21 இதிகாசப் புராணங்களை 'அக்குவேறு ஆணி வேறு' என்று அலசி ஆராய்ந்து முடிவு செய்துட்டோம். இதோ ஆய்வு நூலாகவே வந்து விட்டது. தமிழக கவர்னர் வெளியிட்டு விட்டார். ஆந்திராவில் சேஷாசல மலை என்று ஒன்று இருக்கிறது. அதிலே அஞ்ச நாத்திரி என்ற இடத்தில் தான் 'சாட்சாத்' அனுமான் பிறந்தார்" என்று மகிழ்ச்சி கூத்தாடுகிறது திருப்பதி தேவஸ்தான நிர்வாகம்! "அப்பாடா; இனி நிம்மதியாகத் தூங்குவேன்; சர்ச்சைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டோம்" என்று ஆக்சிஜன் சிலிண்டர் கிடைத்ததைப் போல நிம்மதி பெருமூச்சு விடுகிறார் தமிழக ஆளுநர் புரோகித்.

ஒரு வழியாக 'இராமன்' 'பிறந்த' இடம் உறுதியாகி விட்டது. அதற்காக உச்சநீதிமன்றமே சிவில் சட்டம், கிரிமினல் சட்டம், சர்வதேச சட்டங்களை எல்லாம் புரட்டிப் புரட்டிப் படித்து. அயோத்தியில் பாபர் மசூதிக்குள் தான் இராமன் இருட்டில் பிறந்திருக்கிறான் என்பதை உறுதி செய்து விட்டது.

இன்னும் நிறைய ஆராய்ச்சிகளை நாம் செய்தாக வேண்டும்! இந்திய வல்லரசாக வேண்டுமானால் எப்படி எல்லாம் உழைக்க வேண்டியிருக்கிறது பார்த்தீர்களா? இராமபிரான் கட்டளையை ஏற்று சீதை தீயில் இறங்கிய இடம் எது? இராமன் வனவாசம் இருந்தபோது, அரச சிம்மாசனத்தில் 'அமர்ந்து' நாட்டையே ஆட்சி செய்த செருப்புகள் எந்த கம்பெனியில் தயாரிக்கப்பட்டன? அந்த செருப்பை தைத்துக் கொடுத்த வேதப் பண்டிதர் பெயர் என்ன? எல்லைக் கடந்து இலங்கைக்குப் பறந்து சென்ற இராமராஜ்ய தூதன் அனுமான் எந்த தூதரகத்தில் 'விசா' வாங்கினான்? பறந்து செல்லும்போது 'பிராண வாயு'க்கு தேவையான 'ஆக்சிஜன் சிலிண்டர்கள்' அப்போது 'வாலில்' இருந்ததா? இப்படி ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய பல பிரச்சினைகள் அணி வகுத்து நிற்கின்றன! இதை எல்லாம்விட மற்றொரு முக்கிய ஆராய்ச்சியையும் உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருக்கிறது!

அந்தக் காலத்திலேயே ஸ்ரீராமபிரான், தன்னுடைய தம்பி இலட்சுமணன், பரதனிடம் ஒரு மிக முக்கிய செய்தியை அருளிச் சென்றிருக்கலாம். அதாவது பாரத தேசத்தில் தனக்குப் பிறகு தனது ஒரே வாரிசாக சிம்மாசனத்தில் ஒருவர் உட்காரப் போகிறார்; அவருக்கு நரேந்திர மோடி என்பது பெயர். அந்த ஒருவரால் மட்டுமே தர்ம ராஜ்யம் நடத்த முடியும்" இப்படி இராமபிரான் தனக்கு கோயில் கட்டியவரைப் பாராட்டாமல் இருந்திருக்கவே மாட்டான். இதை எப்படியாவது ஆராய்ந்து வெளியே கொண்டு வந்தாக வேண்டும்; அதை ஊர் தோறும் பேச வேண்டும்.

இதற்காக இதிகாசம், புராணம், வேதம், உபநிடதம் உள்பட அனைத்து நூல்களையும் ஆய்வு செய்ய மோடி ஆட்சியே ஒரு குழுவைப் போடலாம். பல ஓய்வு பெற்ற நீதிபதிகள் தயாராக இருக்கிறார்கள். அல்லது சுப்ரமணியசாமியை வைத்து நீதிமன்றம் வழியாக ஒரு வழக்குக்கு போட்டு தீர்ப்பையே கூட வாங்கி வைத்துக் கொள்ளலாம். நீதிமன்றமும் அதை அவசர வழக்காக உடனே எடுத்துக் கொள்ளத் தயங்காது.

இந்த ஆராய்ச்சிகளை முடித்தால் தான் நாடு வல்லரசு ஆகும்; 'கொரானா' அலறிக் கொண்டு பாரத தேசத்திலிருந்து ஓட்டம் பிடிக்கும்!

ஆமாம்! கொரானாவை ஒழிக்க வேறு வழியே இல்லை. ஜெய் ஹனுமான்!

– கோடங்குடி மாரிமுத்து

# ‘கர்ணன்’ ஓர் பார்வை

**விடுதலை இராசேந்திரன்**

தனது புனைவுகளின் கதை மாந்தர்களை சமூகத்தின் விவாதத்திற்கு உட்படுத்தி இருக்கிறார் இயக்குனர் மாரி செல்வராஜ். கர்ணன் பாராட்டுக்களை குவித்துக் கொண்டிருக்கிறான். ஜாதிய ஒடுக்குமுறைகளையும் அவலங்களையும் பேசும் திரைப்படங்களை தமிழ்ச் சமூகத்தின் ஊடகங்களும், சமூகமும் அரவணைக்கத் தொடங்கி இருப்பது ஆறுதலையும்,மகிழ்ச்சியையும் தருகிறது, என்பதை முதலில் பதிவிட வேண்டும். ஒரு தமிழ் நாளேட்டின் விமர்சனத்தைக் குறிப்பிட விரும்புகிறேன், “படம் நெடுக சுயமரியாதைக்கான வேட்கை கரைபுரண்டு ஓடுகிறது. எல்லாத் தளத்திலும் அவர்கள் தங்களுக்கான உரமையை மட்டுமே கோருகிறார்கள் சலுகைகளை அல்ல” இது மிகச் சரியான மதிப்பீடு. பொடியன் குளத்தில் நிற்க மறுக்கும் அந்தப் பேருந்தில் ஒட்டுமொத்தமாக உரிய கட்டணம் செலுத்தி 11 டிக்கெட்டுகளை எடுப்பதற்கு அவர்கள் தயார். ஆனால், பேருந்து தங்கள் ஊரில் நிற்க வேண்டும், அதுதான் அவர்களின் கோரிக்கை.

சமூகத்தாலும், நிர்வாகத்தாலும் ஒதுக்கப்பட்ட பொடியன் குளம் அவமானங்களைக் காலம்காலமாக சுமந்து பழகிவிட்டது. சண்டை சச்சரவுகள் எதுவும் வேண்டாம் கலகம் வேண்டாம் அடங்கிப் போய் பிழைப்பை ஓட்டுவோம் என்ற மன நிலைக்கு வந்து விட்டார்கள் அந்த ஊர் மக்கள். கர்ணன் மட்டுமே குமுறுகிறான். இன்னும் எத்தனை காலத்துக்கு என்று கேட்கிறான். அந்த மக்களை தயார் படுத்தவே அவன் போராட வேண்டியிருந்தது. மூத்த தலைமுறையின் இருவர் ஆதரவுக் கரங்கள் மட்டுமே கர்ணனுக்காக நீண்டது. அதில் ஒருவர் இராணுவத்தில் சேவை செய்தவராக இறுதிக் காட்சியில் அவரது புகைப்படம் வழியாக சித்தரிக்கப்படுகிறார். இவர் இம்மானுவேல் சேகரனின் குறியீடா ? இருக்கலாம்.

கர்ணனின் போராட்டத்திற்கு முந்திக்கொண்டு களத்தில் வந்து நிற்கிறது அவனது அடுத்த தலைமுறை. இளைஞர்கள் அந்தப் பேருந்தை பொடியன்குளத்தில் நிற்க வைப்பதற்கு பல்வேறு உத்திகளை பின்பற்றி பார்க்கின்றன்றார்கள். அவற்றில் ஒன்று மட்டும் வலிமையானது. திடீரென்று ஒரு விடலைப் பருவ இளைஞன் பேருந்து கண்ணாடியின் மீது வீசும் அந்தக் கல். ஊருக்குள் குதிரை வளர்க்க ஆசைப் படுகிறான் மற்றொரு இளைஞன். காவல்துறை கிராமத்தை சூறையாடி கொலைவெறித் தாக்குதல் நடத்தும் செய்தியை ஊரை விட்டு வெளியேறி இராணுவத்தில் சேர பேருந்தைப் பிடிக்க வெகு தூரம் நடந்து கொண்டிருக்கும் கர்ணனிடம் கொண்டு போய் சேர்க்க, தான் வளர்த்த குதிரையின் மீது ஏறி அந்த இளைஞன் பறந்து செல்கிறான். மக்களை காப்பாற்ற கர்ணன் திரும்ப வேண்டும் என்ற ஆவேசம் அவனை உந்துகிறது. காவல் நிலையத்தில் சமரசம் பேசுவதற்காக அழைத்து வரப்பட்ட கிராம மக்களை மூர்க்கத்தனமாக அடித்து துவம்சம் செய்து பழிவாங்கும் காவல்துறை அதிகாரி பற்றிய தகவலை கர்ணனுக்கு தெரிவிப்பது, காவல் நிலைய வாயிலில் அருகே உள்ள டீக்கடையில் எச்சல் கிளாஸ்களை கழுவும் அந்த இளைஞன் தான். ஆக இளைய தலைமுறை கர்ணன் காட்டிய பாதையில் முன்னேறிச் செல்லும் என்பதை இந்தக் காட்சிகள் உணர்த்து வதாகவே இருக்கிறது.

எளிய மாந்தர்கள் எப்போதுமே உணர்வுகளை மறைக்கத் தெரியாதவர்கள். வாய்மொழிகளும் உடல் மொழிகளுமே அதற்குச் சான்று. காதல், அன்பு, கேலி, ஆத்திரம், கோபம் என்ற உணர்வுகளின் வெளிப்பாடு களால் கை நீட்டுவதும், ஓங்குவதும் அவர்களிடம் இருந்து கொண்டே இருக்கும். அப்படியே அந்தக் கதை மாந்தர்களை கண்முன் கொண்டுவந்து நிறுத்து கிறார் இயக்குனர். நான் உனக்கும் மேலானவன் நீ எனக்கும் கீழானவன் என்ற படிநிலை ஜாதியத்தின் அடித்தளமாக நிற்கிறது. அதே உணர்வு நிர்வாக கட்டமைப்புக்குள்ளும் எதிரொலிக்கிறது. அந்தக் காவல்துறை அதிகாரியின் ஆத்திரத்திற்கும், கோபத்திற்கும் காரணம் இந்தக் கீழ் ஜாதிக்காரர்கள் தனக்கு உரிய மரியாதை தரவில்லை என்பது மட்டுமல்ல எஜமானர்களாக அங்கீகரித்து மரியாதை தரவில்லையே என்பதும் தான். புறக்கணிக்கப்பட்ட எளிய மாந்தர்களுக்கே உரிய அடையாளமான மொட்டை, மயிராண்டி, பாவாடை என்ற பெயர்களை எப்படித் துறக்கலாம் ? கர்ணன், துரியோதனன் என்றப் புனித இதிகாசங்களின் பெயர்களை எப்படிச் சூட்டிக் கொள்ளலாம்? இந்து மதத்தின் இதிகாசக் குறியீடுகளை தங்கள் அடையாளமாக்கிக் கொள்வதைக் கூட இவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. புனிதம் தீட்டாக்கப்படுகிற உளவியலே இவர்களை இயக்குகிறது. அந்த அதிகாரியின் உயிர் கர்ணன் பிடிக்குள் வரும் போது “கந்தையா மகனாகிய நீ கண்ணபிரான் ஆகும் போது மாடசாமியின் மகன் கர்ணன் ஆகக் கூடாதாடா ?” என்று கர்ணன் எழுப்பும் கேள்வி அத்தனை வலிமையானது.



காட்சிகள் தோறும் விலங்கினங்கள் வந்து கொண்டே இருக் கின்றன. யானை, நாய், பூனை, கழுதை, குதிரை, பன்றி, கோழி ஆகியவற்றின் அசைவுகள் காட்சிகளுக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கின்றன. ஜாதி,மத அடையாளங்கள் திணிக்கப்படாத இனங்கள் இவை. இந்த உயிரினங்களின் பட்டியலில் ஆடு,மாடுகளைப் பார்க்கவே முடியவில்லை. சில கிராம சேரிகளில் இவை வளர்ப்பதற்குக் கூட தடை போட்டிருப்பதால் இயக்குனர் தவிர்த்திருப்பாரோ ?

அந்தக் கழுதையின் முன் கால்கள் இரண்டும் கட்டப்பட்டிருந்தன, இரண்டு பின் கால்களைக் கொண்டு நீண்ட காலமாக தத்தித் தத்தித் துயரங்களைச் சுமந்து அந்தக் கழுதை நகர்ந்து கொண்டே இருந்தது. முன் கால் கட்டுகளைக் கண்டு கர்ணன் கவலைப்படுகிறான். ஆனாலும் கூட இனியும் பொறுக்க முடியாது போருக்குத் தயாராக வேண்டியதுதான் என்ற சூழலுக்குத் தள்ளப்பட்ட நிலையில் தான் அந்தக் கழுதையின் கால் கட்டுகளை கர்ணன் அகற்றுவதற்கு முன் வருகிறான். ஒரு கத்தரிக்கோல் அல்லது ஒரு கத்தியால் அந்தக் கயிற்றை ஒரே நொடியில் வெட்டி எறிந்திருக்க முடியும். ஆனால் அருகே கிடந்த கல்லை எடுத்துக் கர்ணன் அந்தக் கயிற்றை நசுக்கி நசுக்கி கயிற்றை நையச் செய்து வெட்டுகிறான். இந்த அடிமைக் கயிற்றை போராடிப் போராடித்தான் வெட்ட வேண்டும். ஒரே நொடியில் கத்தரிக்கோல் அல்லது கத்தியால் வெட்டி எறிந்து விட முடியாது என்பதை உணர்த்துவதாகவே இந்தக் காட்சி தோன்றுகிறது. விடுதலைப் பெற்ற கழுதைப் பாய்ந்துப் பாய்ந்து அதிவேகத்தில் சுதந்திர உணர்ச்சிகளைச் சுமந்து கொண்டு ஓடுகிறது, ஒரு கட்டத்தில் தாயின் அருகே போய் நிற்கிறது, கிராம மக்களின் சுயமரியாதைப் போராட்டங்கள் பாய்ந்து ஓடும் கழுதையுடன் காட்சிப்படுத்தப்படுகிறது. சில காட்சிகளில் வானத்தில் பறவைகளின் சிறகுகள் விரிந்து பறந்து கொண்டிருக்கின்றன.

ஊரில் நிற்க மறுக்கும் அந்தப் பேருந்து ஜாதியத்தின் குறியீடு. கல்வீச்சுக்குப் பிறகுதான் அது நிற்கிறது. கர்ணன் கண்ணாடிகளை, இருக்கைகளை பேருந்தின் ஒவ்வொரு பாகங்களையும் ஆவேசமாக தடி கொண்டு தாக்குகிறான். ஒவ்வொரு அடியும் ஜாதியின் மீதும் அது கட்டமைத்த ஒடுக்குமுறையின் மீதும் விழுகின்ற சம்மட்டி அடியாகவே பார்வையாளர்களிடம் கடத்துகிறார் இயக்குனர்.

கர்ணன் வன்முறைகளை நியாயப்படுத்துகிறானா? அல்லது தூண்டிவிடுகிறானா ? இல்லை. வன்முறை என்ற வரையறைக்குள் இதைப் பொருத்தி விட முடியாது. இது ஜாதியத்திற்கு எதிரான ஒரு போர் என்ற செய்தியையே உணர்த்தி நிற்கிறது. எளிய மக்கள் தங்களுக்கான சுயமரியாதையைத் தான் கேட்கிறார்கள், தங்கள் கிராமத்தில் தாங்களே ’பேருந்து நிறுத்தம்’ என்ற பெயர்ப் பலகையை நிறுவுகிறார்கள். அதை ஜாதி வெறி தான் அடித்து நொறுக்குகிறது. மகளைக் கல்லூரியில் சேர்க்க, அந்த ஜாதி பெரிய மனிதர்கள் வாழும் பேருந்து நிறுத்தத்திற்கு அழைத்துச் செல்கிறார் தந்தை. அங்கே அந்தப் பெண்ணை ஜாதி வெறியுடன் கேலி கிண்டலுக்கு உள்ளாக்கி வீண் சண்டையை ஜாதி வெறியர்கள் தான் உருவாக்குகிறார்கள். உனக்கு என்னடா மரியாதை நீயெல்லாம் ஒரு மனுஷனா என்ற ஆதிக்கத்திற்கு எதிரான எதிர்வினையை வன்முறை என்ற வரையறைக்குள் பொறுத்திவிட முடியாது. அப்படிப் பார்ப்பது மாபெரும் அநீதி. கர்ணன் ஏன் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்படுகிறான் என்பதற்கான நியாயங்களையே படம் பேசுகிறது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு அதே கிராமத்தில் நிகழ்ந்த மாற்றங்களையும் ஊருக்கு வெளியே பேருந்து நிற்காத காலம் மாறி வீதி வீதியாக ’மினி பேருந்துகள்’ ஓடிக் கொண்டிருப்பதையும் நியாயமாக நேர்மையுடன் படத்தின் இறுதியில் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர்.

இறுதியாக ஒன்று ஜாதியத்திற்கு எதிரான இந்த திரைப்படம் நாட்டார் தெய்வ வழிபாட்டை புதிய வெளிச்சத்தில் போற்றுகிற திரைப்படமாக சிலர் கருத்துக்களை முன்வைக்க துவங்கி இருக்கிறார்கள். நாட்டார் தெய்வ வழிபாட்டை தீவிரமாக வலியுறுத்துகிறவர்கள் இந்த படத்தை அந்தக் கண்ணோட்டத்தில் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் படமும் நாட்டார் வழிபாட்டை முன்நிறுத்தி இருக்கிறது என்பது உண்மைதான். நாட்டார் தெய்வங்கள் கலக வரலாறுகளில் தோன்றியிருக்கலாம் ஆனாலும் காலம் காலமாக அந்த தெய்வங்கள் மீது புனைவுகள் ஏற்றப் பட்டு இருக்கின்றன, அதீத கற்பனைகளும், மூடநம்பிக்கைகளும் திணிக்கப்பட்டு இருக்கின்றன. அதன் வழியாக அச்சுறுத்தல்களின் பிம்பங்களாக அந்தத் தெய்வங்கள் மக்கள் மனதில் நிலைநிறுத்தப் பட்டு இருக்கின்றன. இந்த வழிபாடுகளில் ஜாதிய படி நிலைகளும், பாகுபாடுகளும் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இந்த புனைவுகளில் நம்பிக்கையில்லாத நவீனத்துவ அறிவியல் இளைஞராகவே கர்ணன் இருக்கிறான். புதையலைத் தோண்டத் தந்தை சாமியாடி கட்டளையிட்ட போது அந்தப் புனைவை நம்ப மறுக்கிறான் கர்ணன். ஆனாலும் தந்தையின் கட்டளைப்படி தோண்டுகிற போது அங்கே புதையல் கிடைத்துவிடுகிறது. இங்கே கர்ணனின் அறிவியல் பார்வையை புனைவும், மூடநம்பிக்கையும் வென்றுவிடுகிறது. அறிவியலைப் புறக்கணித்து புனைவுகளை நியாயப்படுத்துவது என்பது சரியான பார்வைதானா ? நாட்டார் தெய்வ மீட்டுருவாக்கம் சமுதாயத்தை முன்னோக்கி நகர்த்துமா ? அல்லது பின்னுக்கு இழுத்துச் செல்லுமா ? என்ற கேள்விக்கு பின்னோக்கியே இழுத்துச் செல்லும் என்பதே வரலாறு நெடுக நமக்கு உணர்த்தும் பாடங்கள். ஜாதி வன்மத்தை பேசும் இந்த திரைப்படத்தை கூட நாட்டார் வழிபாட்டை போற்றும் ஒரு படமாக மாற்ற முயற்சிப்பதில், இந்த நாட்டார் தெய்வ வழிபாட்டு ஆதரவாளர்கள் முயற்சிக்கிறார்கள் என்பதில் இருந்தே இந்த ஆபத்தை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். ஜாதியத்தை எதிர்க்கும் திரைப்படங்கள் அதற்கான கருத்தியல் ஊற்றாக நிற்பது சனாதான தர்மம் என்ற மனு வாதம் என்பதை குறியீடாகக் கூட சித்தரிக்காமல் ஜாதிய கட்டமைப்புகளில் இருந்து சனாதான மதவாதத்தை துண்டித்துவிடுகிற போக்கு சரிதானா என்ற கேள்வியும் எனக்குள் எழுகிறது.

படத்தின் ஒவ்வொரு கதை மாந்தரும் மறக்கமுடியாத அவர்களாக உள்ளத்தில் பதிந்து நிற்கிறார்கள். நடிகர் தனுஷ் நடிப்பில் உச்சம் தொட்டு இருக்கிறார்.

ஒரு இலக்கிய படைப்பாளி திரைப்பட இயக்குனராகும் போது திரைப்படம் இலக்கியமா கிறது. திரைப்படத் தொழில் நுட்பங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் காட்சிகளையும் கதை மாந்தர்களையும் பார்வையாளர்களிடம் வலிமையாக கடத்துவதில் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறான் கர்ணன். மாரிக்கு பூமாரி பொழிய வேண்டும்.

இரண்டு வரலாற்று குறிப்புகள் :

1) வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதி சுந்தரலிங்கம் பெயர் சூட்டப்பட்டதாலயே 1996-ல் ஊருக்குள் அரசு பேருந்து வரக்கூடாது என்று தென் மாவட்டங்களில் ஜாதி வெறியர்கள் கலகம் செய்தனர். இந்தப் படத்தில் ஓடும் பேருந்துக்கு அதன் குறியீடாகத்தான் கட்டபொம்மன் பெயர் சூட்டப்பட்டு இருக்க கூடும் என்று தெரிகிறது.

2) 1930- களில் ராசபாளையம் சென்ற பேருந்துகளில் தீண்டப்படாதவர்களுக்கு இடமில்லை என்று டிக்கெட்டுகளில் அச்சிட்டு வழங்கப்பட்டது. மதுரை இராமநாதபுரம் மாவட்ட தலைவராக இருந்த சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவர், நீதிக்கட்சித் தலைவர் WPA சௌந்தர பாண்டியன் அத்தகைய பேருந்துகளுக்கு உரிமையும் வழங்கப்பட மாட்டாது என்று கூறி உரிமத்தை ரத்து செய்தார் என்பதும் ஒரு வரலாற்றுக் குறிப்பு.

– முகநூல் பதிவு

# கும்பமேளா : ஜோதிடத்துக்காக மக்களை பலி கொடுத்த ஆட்சிகள்

பொது சுகாதாரத்தை விட ஜோதிடர்களை திருப்திப்படுத்த மத்திய அரசாங்கமும், மாநிலஅரசாங்கமும் முடிவெடுத்ததால், 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை அனுசரிக்கப்படுகிற கும்பமேளா ஹரித்வாரில் இம்முறை 11 ஆண்டுகள் முடிந்ததுமே நடத்தப்பட்டது.

கும்பமேளாக்கள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. ஹரித்வார் கும்பமேளா கடைசியாக நடந்தது 2010ஆம் ஆண்டில். எனவே, 'தற்போதைய' இந்தக் கும்பமேளாவை நடத்த வேண்டிய ஆண்டு 2021 அல்ல, 2022. ஆனால், இந்தியாவில் கோவிட் இரண்டாம் அலை வரும் என எதிர்பார்க்கப் பட்ட சூழலில்கூட, முழுமையாக ஓராண்டிற்கு முன்னாலேயே கும்பமேளாவை நடத்த ஏன் முடிவெடுத்தார்கள்? அதுவும் மிக ஆபத்தான இந்த ஆண்டில் ஏன் நடத்தினார்கள்? அதுவும், பெருந்தொற்று குறித்த ஆய்வுகள், எப்போதுமே முதலாம் அலையைக் காட்டிலும் இரண்டாம் அலைத் தொற்றுகள் மோசமாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டிய பிறகும் ஏன் நடத்தப்பட்டது?

ஜோதிடக் கணிப்புகளின்படி, 'சூரியன் மேஷ ராசிக்கும்', 'குரு (வியாழன்) கும்பராசிக்கும்' இந்த ஆண்டில் இந்தக் காலகட்டத்தில் இடம் பெயர்கிறார்களாம். நாட்காட்டிக்கும், சோதிட கணிப்புக்கும் இருக்கும் இடைவெளியை சரிக்கட்ட ஓராண்டு முன்கூட்டியே நடத்தப்பட்டதாம். 83 ஆண்டுகளுக்கு ஒரு முறை இப்படி நிகழுமாம். இந்தக் கணக்கின் சூட்சமங்களை விளக்கும் திறன் எனக்கில்லை. உங்களுக்கு தலைவலி வர வேண்டாம் என்றால், அந்த வேலையில் நீங்களும் இறங்காதீர்கள்.

எனவே, இந்திய அரசாங்கமும், உத்தரகண்ட் மாநில அரசாங்கமும் கும்பமேளாவை நடத்தாமல் இருந்திருக்கலாம். பல கோடி மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இந்த கோவிட் சூப்பர் தொற்று நிகழ்ச்சியை மிகச் சாதாரணமாகத் தவிர்த்திருக்க முடியும். இது 11 ஆவது ஆண்டுதான். ஹரித்வாரில் கும்பமேளா நடந்து இன்னும் 12 ஆண்டுகள் முடியவில்லை எனச் சொல்லி, மிகச் சாதாரணமாக இந்த ஆண்டில் நடப்பதைத் தடுத்து இருக்கலாம். வாய்ப்பிருந்தால் 2022 ஆம் ஆண்டில், இப்படிப் பட்ட ஒரு நிகழ்வை நடத்தும் புறச்சூழ்நிலையை உருவாக்குவதற்காக, இந்த முழு ஆண்டையும் கூட பயன்படுத்தி இருக்கலாம்.

ஆனால், அந்த இரண்டு அரசாங்கங்களும் அப்படிச் செய்யாமல், இன்னும் கொடூரமான காரியங்களைச் செய்தன. அகில பாரதிய அக்காதா பரிஷத்திடம் ஆலோசனை நடத்தி, 2022 ஆம் ஆண்டு நடக்க வேண்டிய நிகழ்வை ஓராண்டு முன்கூட்டியே நகர்த்தி 2021ஆம் ஆண்டில் நடத்தின.

பெருந்தொற்று பரவல் நடக்கும் இடம் என வரலாற்றில் ஆவணப்படுத்தப்பட்ட நிகழ்வு கும்பமேளா.

சின்மை தும்பே எழுதிய சமீபத்திய நூல், "பெருந் தொற்றுகளின் காலம்: அவை எப்படி இந்தியாவையும் உலகத்தையும் வடிவமைத்தன (The Age of Pandemics: How They Shaped India and the World)", பெருந்தொற்றுகளையும், 'கும்பமேளா'க்களையும் பற்றிய குறிப்பிட்ட விவாதத்தை உள்ளடக்கி இருக்கிறது. 1986ஆம் ஆண்டில் டேவிட் ஆர்னால்டின் எழுதி வெளி வந்த, 'காலராவும், பிரிட்டிஷ் இந்தியாவில் காலனியமும்' என்ற கட்டுரையும், காமா மெக்லீனின்' எழுதிய 'புனிதயாத்திரைகளும் அதிகாரமும்': அலகாபாத்தில் கும்பமேளா, 1765-1954' என்ற 2008இல் வெளியான நூலும் ஏராளமான தகவல்களைத் தருகின்றன. கும்பமேளா மற்றும் தொற்றுகள் குறித்த வரலாறு பல ஆண்டுகளாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. உலக சுகாதார நிறுவனத்திடம் உள்ள காலரா குறித்த வரலாற்றுப் பதிவுகளில் கும்பமேளாவைப் பற்றிய தனி அத்தியாயமே இருக்கிறது. 1895ஆம் ஆண்டு இந்திய மருத்துவ கெஸட்டில், ஹரித்வார் காலரா தொற்றுகள் குறித்த இயற்கை வரலாறு என்ற கட்டுரையும், 'கும்பமேளா பற்றிய விரிவான ஆய்வாகும்.



தொற்று நோய் பரவலுக்கான ஆபத்துகளைக் கண்டறிவது - 2015' என்ற சமீபத்திய ஆய்வு அறிக்கையும் வெளி வந்திருக்கிறது.

2020 ஜூலையில் உத்தரகாண்ட் அப்போதைய முதல்வர்,திரிவேந்திர சிங் ராவத் (பாஜக), அகில பாரதிய அக்காதா பரிஷத்திடம் வழக்கம்போல கும்பமேளா நடைபெறும் என்று வாக்குறுதி அளித்தார்.

செப்டம்பர் 2020 ஆம் ஆண்டில் திரிவேந்திர சிங் ராவத் கூட்டத்தின் எண்ணிக்கையில் கட்டுப்பாடுகள் இருக்கும் என்றார். டிசம்பர் 2020ஆம் ஆண்டில், அக்காதா பரிஷத்தின் 'துறவிகள்', அரசாங்கம் மேற்கொள்ளும் கும்பமேளா ஏற்பாடுகள் தங்களுக்கு 'அதிருப்தி' தருவதாகச் சாடினார்கள். கொரனாவைக் காட்டி நிறுத்தினார்கள். எங்கள் வழியில் நாங்கள் நடத்துவோம் என அக்காதா பரிஷத் மிரட்டியது.

2021 மார்ச் 9இல், பா.ஜ.க. முதல்வர் திரிவேந்திர சிங் ராவத் ராஜினாமா செய்தார். அடுத்ததாகப் பதவிக்கு வந்த தீரத் சிங் ராவத், அதெல்லாம் எந்தக் கட்டுப்பாடுகளும் கிடையாது, புனிதயாத்திரை மேற்கொள்பவர்களுக்கு ஒரு கட்டுப்பாடும் இருக்காது, கங்கை அன்னை அருளால், இந்தத்தொற்று நோயை வென்று விடுவோம் என்றார். திரிவேந்திர சிங் ராவத் பதவியைவிட்டு விலகிய பிறகு, கும்ப மேளாவிற்கான கட்டுப்பாடுகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டது தொடர்பாக அதிருப்தியை வெளியிட்டிருந்தார். பா.ஜ.க. முதல்வராக இருந்தும் திரிவேந்திர சிங் ராவத் மாநிலத்தில் 53 கோயில்களை பார்ப்பனர் பிடியிலிருந்து மீட்டு சட்டம் இயற்றினார். கும்பமேளாவுக்கு கட்டுப்பாடுகள் விதித்தார். அதனாலே ஆரம்பத்திலேயே பதவி பறிக்கப்பட்டது.

- 'அக்காதா பரிஷத்' ஆலோசனைப்படி ஜோதிடத்தை நம்பி கும்பமேளாவை ஓராண்டு முன் கூட்டியே நடத்தியது மத்திய, மாநில ஆட்சிகள்.
- மத்திய சுகாதாரத் துறை அதிகாரிகள் கவலை தெரிவித்தும் பொருட்படுத்தவில்லை நடுவண் ஆட்சி.
- பெரும் தொற்றுகளின் உற்பத்திக் கூடமாக வரலாறு நெடுக 'கும்ப மேளா' இருந்திருக்கிறது.
- இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் குண்டுவீசக்கூடும் என்று அன்றைய மத்திய அரசு கும்பமேளாவுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்தது.

ஏப்ரலில் இந்த நிகழ்வு தொடங்கியபோது, மத்திய குடும்பநலம் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம், ஏப்ரல் 6ஆம் தேதி, கொரானாவால் வேகமாகப் பரப்பும் நிகழ்வின் கும்பமேளா இருக்கும் என்று கவலை தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அரசு ஆதரவு செய்தி நிறுவனமான ஏ.என்.அய். கூட இதை வெளியிட்டது. கும்பமேளா இருப்பது குறித்து, மூத்த அரசு அதிகாரிகள் கவலை தெரிவிப்பதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையில் சிறிய மாற்றங்களைச் செய்து, பல்வேறு செய்தித் தளங்களும், இந்தியா டுடே உள்ளிட்ட இதழ்களும் செய்தி வெளியிட்டன. இச்செய்திகள் போலியானது என்றுமறுநாளே மத்திய குடும்பநலம் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சகம் தன்னுடைய டிவிட்டர் பக்கத்தில் மறுப்பு வெளியிட்டது.

உதாரணமாக பிரதமர் மோடி மேற்கு வங்கத்தில் மிகப் பெரும் தேர்தல் கூட்டங்களுக்கு மக்களை வரவழைத்துக் கொண்டே, மிச்சமுள்ள கும்பமேளாவின் பூஜைகளை அடையாள நிகழ்வாக கூட்டம் கூட்டாமல் நடத்திக் கொள்கிறீர்களா என்று கேட்டார். அதுவும் மிகத் தாமதமாகவே கேட்டார்.

இதற்கு முன்னர் கும்பமேளா ஓராண்டிற்கு முன்னதாக நடத்தப்பட்டிருக்கிறதா? ஆமாம். 1938, 1855 ஆம் ஆண்டில், இதேபோல 'ஜோதிட இடப் பெயர்வுகள்' நடந்தபோது இப்படி செய்யப்பட்டிருக்கிறது.நாம் என்ன 1938-லும், 1855-லுமா வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? காற்றால் பரவும் பெருந்தொற்றை நாம் 1938 ஆம் ஆண்டில் எதிர்கொண்டோமா? 1855ஆம் ஆண்டில் கும்பமேளா வந்தபோது காலரா பெருந்தொற்று இருந்தது. அந்தக் கும்பமேளா நிகழ்வு காலராவின் தாக்கத்தைப் பெருமளவில் அதிகப்படுத்தவும் செய்தது. பெருந்தொற்று தொடர்பான அறிவு குறைவாக இருந்த அந்தக் காலத்தில்கூட, இதைப் பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. 1866ஆம் ஆண்டில் இஸ்தான் புல்லில் நடைபெற்ற உலகத் தூய்மைப்பணி சிறப்பு மாநாடு (International Sanitary Convention) குறிப்பாக கும்பமேளாவிலிருந்து தொடங்கிய நோய்த் தொற்றைக் குறித்த அறிக்கைகள் மீது கவனம் செலுத்தியது. 1866 ஆம் ஆண்டில் உருவான சர்வதேச ஒருமித்தக் கருத்தின்படி, 'கங்கை ஆற்றை ஒட்டிய இந்தியப் புனிதயாத்திரைத் தளங்கள் காலரா தொற்றை உருவாக்கிய இடங்களாக இருந்தன என்றும், அதன் பிறகு அங்கிருந்து முதலில் மெக்காவுக்கும், பிறகு எகிப்துக்கும் சென்று, பிறகு ஐரோப்பாவின் மத்திய தரைக்கடல் பகுதி துறைமுகங்கள் வாயிலாக ஐரோப்பாவில் புகுந்து, முக்கிய ஐரோப்பிய நகரங்களைத் தாக்கியது' என, 1866 ஆம் ஆண்டில், அன்றைய ஆட்டோமான் துருக்கிய அரசின் தலைநகராக இருந்த இஸ்தான் புல்லில் பிப்ரவரி முதல் செப்டம்பர் வரை நடைபெற்ற சர்வதேச தூய்மைப்பணி சிறப்பு மாநாட்டின் உரைத் தொகுப்புகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

பெருந்தொற்றுகள் பற்றி 1938 அல்லது 1855ல் பெற்றிருந்த அறிவைக் காட்டிலும் கூடுதல் அறிவை நாம் 2021 ஆம் ஆண்டில் பெற்றிருக்கும் நிலையில், பகுத்தறிவு பெற்ற, அறிவார்ந்த அரசாங்கம், 'புனிதர்கள்' என்று தங்களைத் தாமே நியமித்துக் கொண்ட ஒரு சிறிய குழுவினரை, தன்னுடைய அனைத்து வகையான சக்திகளையும் பயன்படுத்தி சம்மதிக்க வைத்திருக்க முடியும். இந்த ஒரே முறை மட்டும் ஜோதிடத்தை சற்றுத் தள்ளிவைத்துவிட்டு, எளிமையாக நாட்காட்டிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தும் முறையையே பின்பற்றி இருக்கலாம்.

'இப்படி ஒரு பேரிடர் ஏன், எப்படி நிகழ்ந்தது' என்று எந்தவொரு விளக்கத்தையும் ஜோதிடப்படி எந்த ஒரு ஜோதிடராவது இதுவரை விளக்கியிருக் கிறார்களா? இல்லை.

### 1942: கும்பமேளாவைத் தடை செய்த போர்

அலகாபாத்தில் 1942ஆம் ஆண்டில் நடைபெற்ற, கும்பமேளாவும், மகாமேளாவும் இணைந்த நிகழ்விற்காக, இந்திய அரசாங்கம் எந்த ஏற்பாடுகளையும் செய்து தரவில்லை. அந்தக் கும்பமேளா நடைபெற்ற காலம் முழுவதும் அலகாபாத்துக்கு ரயில் டிக்கெட்டுகள் ஏதும் விற்பனை செய்யப்படவில்லை. இதன் வாயிலாக, கும்பமேளாவுக்குப் போகும் கூட்டம் கட்டுப் படுத்தப்பட்டது. இரண்டாம் உலகப் போர் நடந்த அக்காலத்தில் ஜப்பானிய விமானப் படை குண்டு வீசக்கூடும் என்ற காரணம் காட்டி, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது 'சங்கிகள்', 'சாதுக்களி'டமிருந்து இந்தத் தடைக்கு எதிர்ப்புகளும் வரவில்லை.

இம்முறையோ, ரயில்களை ரத்து செய்வதற்குப் பதிலாக, இந்திய ரயில்வே டேராடூனுக்கும், ரிஷிகேஷுக்கும் இடையில் சிறப்பு ரயில்களை இயக்கியது. மேலும், அரசாங்கம் பெரும் எண்ணிக்கையில் கூடுவதைத் தூண்டும் வகையில் செய்தித்தாள், தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்தது.

**சுத்தபிரதா சென்குப்தா கட்டுரையிலிருந்து சில பகுதிகள்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 29.04.2021**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தமிழகத்தின் வலிமையான சுகாதார கட்டமைப்புகள் : ஒரு பார்வை

சமீபத்தில் வெளிவந்த Dravidian Model புத்தகத்தில் தமிழ்நாட்டில் சுகாதாரக் கட்டமைப்பு எப்படி உருவாக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டிருக்கிறது என்பது குறித்து Democratizing Care என்ற தலைப்பில் ஒரு அத்தியாயம் இருக்கிறது. அதிலிருந்து சில பகுதிகள் கீழே:

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுப்பாட்டை உருவாக்குவதில் தொடர்ந்து செயல்பட்டுவந்திருக்கிறது. இந்தியாவிலேயே மிகச் சிறந்த கட்டமைப்பு இங்குதான் இருக்கிறது. தமிழ்நாட்டில் மாநில அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் பாதி கட்டடங்கள் சுகாதாரம், கல்வி சார்ந்தவை.

மத்திய அரசு மிகக் குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்தாலும், ஆரம்ப நிலை மருத்துவத்தை வழங்குவதை நோக்கியே தமிழ்நாடு தனது நிதியை செலவழித்திருக்கிறது.

மக்களுக்கான மருத்துவ வசதிகளை அளிப்பதில் மிக முக்கியமான கட்டமைப்பு இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான். இந்திய சராசரியோடு ஒப்பிட்டால் தமிழ்நாட்டின் ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

கிராமப்புற சுகாதார செவிலியர்களின் மூலம், மாநிலத்தில் கர்ப்பமடையும் பெண்களின் தகவல்கள் பதிவுசெய்யப்படுகின்றன. ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான தடுப்பூசி உறுதிசெய்யப்படுகிறது. பிரசவத்திற்கு முந்தைய கவனிப்பு, பிரசவம், பிரசவத்திற்கு பின்பு தாய் - சேய்க்கான நல உதவிகளைச் செய்வது போன்றவற்றில் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களே முக்கியப் பங்காற்றுகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 27,215 பேருக்கு ஒரு இத்தகைய மய்யங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தியாவில் 32,884 பேருக்குதான் ஒரு மய்யம் இருக்கிறது. தமிழ்நாட்டில் 12 கிராமங்களுக்கு ஒரு மய்யம் இருக்கிறது. இந்தியாவில் 25 கிராமங்களுக்கு ஒன்று என்றுதான் மய்யம்இருக்கிறது.

குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களோடு ஒப்பிட்டால் தமிழ்நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாகவும் கூடுதல் வசதிகளோடும் செயல்படுகின்றன. மாநிலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 89 சதவீதத்திற்கு மேலானவை 24 மணி நேரமும் செயல்படுகின்றன. ஆனால், இந்திய அளவில் 39 சதவீத ஆரம்ப சுகாதார நிலையங்களே 24 மணி நேரமும் செயல்படுகின்றன.

அகில இந்திய அளவில் வெறும் 27 சதவீத ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும்தான் மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் 74 சதவீத ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் இருக்கிறார்கள். இதில் 72 சதவீதத்திற்கும் மேற்பட்ட பிஎச்சிக்களில் பெண் மருத்துவர்கள் இருக்கிறார்கள். 95 சதவீத PHCகளில் பிரசவ வார்டு இருக்கிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியை வைத்து தமிழ்நாடு தனது ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்க ஆரம்பித்தது. இதற்குப் பிறகு 'தேசிய ஊரக சுகாதாரத் திட்டம்' (National Rural Health Mission) மூலம் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு கருவிகளை வாங்கியதோடு கட்டமைப்பையும் மேம்படுத்தியது.

இப்படி ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கிவிட்டாலும், அதில் பணிபுரிய மருத்துவர்கள், செவிலியர்கள், பல் மருத்துவர்கள், மருந்தாளுநர்கள் ஆகியோர் தேவை. இதற்கு மருத்துவக் கல்லூரிகள் தேவை. இப்படியான மருத்துவ பணியாளர்களை உருவாக்குவதில் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கிறது தமிழ்நாடு. இந்தியா வகுத்திருக்கும் விதிகளைக்காட்டிலும் அதிக அளவிலான மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருப்பது இதற்கு முக்கியக் காரணம்.

இந்திய அரசின் விதிகளின்படி 2015ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 15 மருத்துவக் கல்லூரிகள் இருந்தால் போதுமானது. ஆனால், அப்போதே தமிழ்நாட்டில் 45 மருத்துவக் கல்லூரிகள் இருந்தன. இந்தியா முழுவதுமே 385 மருத்துவக் கல்லூரிகள்தான் இருக்கின்றன என்ற நிலையில் 12 சதவீத கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருந்தன.

தனியார் மருத்துவக் கல்லூரிகளும் ஊக்குவிக்கப்படுகின்றன என்றாலும், மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் மருத்துவக் கல்லூரிகள் இருப்பதை அரசு உறுதிசெய்திருக்கிறது. நேஷனல் ஹெல்த் ப்ரொஃபைல் தரவுகளின்படி, தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கையின்படி பார்த்தால், பத்தாயிரம் பேருக்கு 17.7 மருத்துவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் இந்தியாவில் 10,000 பேருக்கு 8.7 மருத்துவர்களே இருக்கிறார்கள். பதிவு செய்யப்பட்ட செவிலியர்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் 10,000 பேருக்கு 44.4 பேர் இருக்கின்றனர். இந்திய அளவில் 10,000 பேருக்கு 22 செவிலியர்களே இருக்கின்றனர்.

அதேபோல, மருத்துவர்களை பொது சுகாதார அமைப்பு வேலைகளில் தக்கவைப்பதிலும் தமிழ்நாடு சாதனை படைத்திருக்கிறது. தொலைதூரப் பகுதிகளிலும் உள்ளடங்கிய பகுதிகளிலும் பணியாற்றும் மருத்துவர்களுக்கு incentiveகள் வழங்கப்படுகின்றன. இதனால், பொது சுகாதார அமைப்பில் மருத்துவர்கள் தொடர்ந்து பணியாற்றுகின்றனர். மாநிலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் 7.6 சதவீத காலிப் பணியிடங்களே இருக்கின்றன. ஆனால், பிஹாரில் 63 சதவீத காலிப் பணியிடங்கள் இருக்கின்றன.

– கே. முரளிதரன்

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 newsdvk@gmail.com

# ஜெயப்பிரகாசு-கலைவாணி இணையேற்பு விழா



சென்னை கழகத் தோழர் ஜெயபிரகாஷ் - கலைவாணி இணையேற்பு நிகழ்வு 26.04.2021 அன்று மாலை 6 மணியளவில் மயிலாப்பூர் பிரகாச மாதா திருமண அரங்கில் நடைபெற்றது.

சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை வகிக்க, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் இணையேற்பை நடத்தி வைத்து வாழ்த்துரையாற்றினார். சென்னை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இராமு மணிவண்ணன், பிரபாகரன் ஆகியோரும் இணையர்களை வாழ்த்தி உரையாற்றினார்.

நிகழ்வில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட கழகத் தலைவர் வேழவேந்தன் ஆகியோர் உட்பட சென்னை கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

# கோவிஷீல்ட் தடுப்பூசி விலை உலகிலேயே இந்தியாவில் அதிகம்

இந்தியாவில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருமே மே 1 முதல் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்று மத்திய பாஜக அரசு அறிவித்த உடனேயே, இந்தியாவில் 'கோவிஷீல்ட்' என்ற தடுப்பூசியின் விலையை, அதனை தயாரித்து வழங்கும் 'சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா' நிறுவனம் பல மடங்கு உயர்த்தியது.

மத்திய அரசுக்கு ஒரு டோஸ் ரூ. 200 என்ற விலைக்கு, கோவிஷீல்ட் தடுப்பூசியை வழங்கிவரும் சீரம் நிறுவனம், மாநில அரசுகளுக்குவிலையை ரூ. 400 ஆகவும், இதையே தனியார் மருத்துவமனைகளுக்கு ரூ. 600 என்றும் உயர்த்தியது. இது இந்தியாவில் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.ஆனால், 600 ரூபாய் என்ற விலையே குறைவுதான் என்றும், சொல்லப்போனால் 1000 முதல் 1500ரூபாய்க்கு தடுப்பூசியை நாங்கள் விற்க வேண்டும் என்றும் சீரம் நிறுவனத்தின் தலைவர் ஆதார் பூனாவாலா கூறியிருந்தார்.

சீரம் நிறுவனம் ஒப்பந்த முறையில் இந்த தடுப்பூசியை தயாரித்தாலும், ஒரு டோஸுக்கு ரூ. 150 என்ற லாபத்தை ஈட்டுகிறோம். நாங்கள் எந்த லாபத்தையும் ஈட்டவில்லை என்று நான் கூறமாட்டேன். ஆனால்நாங்கள் 'சூப்பர் லாபம்' என்றுஅழைப்பதை தியாகம் செய்துள்ளோம் என்றும் தெரிவித்திருந்தார்.பிரதமர் நரேந்திர மோடியும், அவரது கட்சியினரும் ஒருபடி மேலே சென்று, உலகிலேயே இந்தியாவில் மட்டும்தான் மிகக் குறைவான - மலிவான விலைக்கு தடுப்பூசி வழங்கப் படுவதாக தேர்தல் பிரச்சாரங்களில் முழங்கி வந்தனர்.

இந்நிலையில், உலகின் வேறெந்த சந்தையில் விற்கப்படும் தடுப்பூசியின் விலையைக் காட்டிலும், இந்தியாவில் விற்கப்படும் கோவிஷீல்ட் தடுப்பூசியின் விலைதான் அதிகம் என்பது தற்போது தெரியவந்துள்ளது.அஸ்ட்ராஜெனகா மற்றும் ஆக்ஸ்போர்டு நிறுவனங்களின் கண்டுபிடிப்புதான் கோவிஷீல்ட்என்ற நிலையில், அஸ்ட்ராஜெனகாவிடம் இருந்து நேரடியாக மருந்துகளைப் பெறும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய யூனியன் களில் இந்த மருந்து குறைவான விலைக்கே விற்கப்படுகிறது. அமெரிக்காவில் மட்டுமே இது அதிகவிலைக்கு விற்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னல் தொகுத்த தரவுகளின்படி, அஸ்ட்ரா ஜெனகாவில் சிறிய முதலீடு செய்த இங்கிலாந்து, ஒரு டோஸுக்கு சுமார் 3 டாலர் செலுத்துகிறது. 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் இதே தடுப்பூசி ஒரு டோஸ் 2.15 டாலர் முதல் 3.50 டாலர் வரையிலான விலைக்கே விற்கப்படுகிறது. அமெரிக்கா ஒரு டோஸுக்கு 4 டாலர் என்ற அளவில் வழங்குகிறது.

ஆனால், அமெரிக்காவில் விற்கப்படுவதைக் காட்டிலும் அதிகவிலையில் கோவிஷீல்டை இந்தியாவில் சீரம் நிறுவனம் விற்றுக் கொண்டிருக்கிறது. மாநில அரசின் மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக் கொள்ளும் ஒவ்வொரு இந்தியரும் கோவிஷீல்ட் டோஸுக்கு ரூ. 400 (5.30 டாலருக்கு மேல்) பணம் செலுத்த வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் மருத்துவமனைகளில் ரூ. 600 ஆக உள்ளது. வங்கதேசம், சவூதி மற்றும் தென்னாப்பிரிக்கா நாடுகளில் விநியோகிக்கப்படும் சீரம் நிறுவனத்தின் தடுப்பூசி விலையை காட்டிலும், இந்தியாவில் அதிகவிலைக்கு கோவிஷீல்ட் விற்பனை செய்யப்படுகிறது. இந்தியாவில் தடுப்பூசியின் விலையை ரூ. 400 என அதிகரித்துக் கொள்ள மத்திய அரசு ஒப்புக் கொண்டதா? என்ற கேள்விக்கு,மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ்வர்தன் மற்றும் சுகாதார செயலாளர் ராஜேஷ் பூஷண் ஆகியோர் இதுவரை பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th April 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN